# குழந்தைகளுக்கு வேதாகமம்
## வழங்குபவர்

# நல்ல சமாரியன்



எழுதியவர்: Edward Hughes
சித்தரிப்பவர்: M. Maillot; Lazarus
மொழிபெயர்ப்பாளர்: Rev. Dr. Dasan Jeyaraj
தழுவியவர்: Ruth Klassen; Sarah S.

**கதைகள்** 60 **ல்** 46

**www.M1914.org**

***Bible for Children,*** *PO Box 3, Winnipeg, MB R3C 2G1 Canada*

உரிமம்: இந்த கதையை நகலெடுக்கவோ, அச்சிடவோ அனுமதி உண்டு ஆனால் இதை விற்பதற்கு அனுமதி இல்லை.

Tamil







"தேவனிடத்தில் அன்பு கூறு மற்றும் அயலானிடத்தில் அன்பு கூறு" என்றான் அந்த மனிதன். ஆனால், "என்னுடைய அயலான் யார்?" என்று கேட்டான்.
3


அந்த மனிதனுக்கு பதில் கொடுக்கும் வகையாக எருசலேமிலிருந்து எரிகோவுக்கு சாலை ...
4


... வழியாக பிரயாணம் பண்ணின ஒரு மனிதனைப் பற்றிய கதையை சொன்னார்.
5


அந்த மனிதன் திருடர்களால் தாக்கப்பட்டான்.
6


திருடர்கள் துரதிஷ்டவசமாக அந்தப் பிரயாணியின் துணிமணிகள் முதற்கொண்டு, தங்கள் கையில் கிடைத்த எல்லாவற்றையும் திருடி சென்றார்கள்.
7


அவனைக் காயப்படுத்தி, சாலையருகில் பாதி உயிருடன் விட்டு சென்றார்கள்.
8


தற்செயலாக அந்த வழியாக ஒரு
ஆசாரியன் வந்தான்.
9


நிச்சயமாக அவன் காயப்பட்ட
அந்த மனிதனுக்கு
உதவிசெய்வான்.
10


இல்லை!  இரத்தம் வடிந்து
கொண்டிருக்கிற அந்த
மனுஷனைப் பார்த்து, ...
11


... சாலையின் அடுத்துப் பக்கம் சென்று
கடந்து போய்விட்டான்.
12


சற்று நேரத்தில் வேறொருவர் வருகிற காலடி சத்தம்
கேட்டது.  அவன் ஒரு லேவியன் - தேவாலயத்தில்
ஆசாரியனுக்கு உதவி செய்கிறவன்.
13


அவன் போய், காயமுற்ற மனிதனைப்
பார்த்தான், பின்பு அவனுக்கு உதவி
செய்யாமல் அப்புறம் போய்விட்டான்.
14


கடைசியாக ஒரு சமாரியன் அந்த வழியாக வந்தான். யூத மக்கள் சமாரியர்களை வெறுத்தார்கள்.
15
இயேசுவின் கதையைக் கேட்டு கொண்டிருந்தவர்கள் ஒரு சமாரியன் வீரனாக வருவதை எதிர்பார்க்கவில்லை.
16
ஆனால் அவன் வந்தான். அந்த சமாரியன் அக்கறையுடன், குனிந்து உதவி செய்தான்.
17
சமாரியன் முழங்காற்படியிட்டான், மற்றும் காயங்களுக்கு கனிவாக மருந்து போட்டு, அந்த அந்நியனின் காயங்களை கட்டினான்.
18
சாலையோர சத்திரத்தில், அந்த சமாரியன் இரவு முழுவதும் கண் விழித்து அவனை கவனித்தான்.
19
காலையில் சத்திரக்காரனிடத்தில் பணத்தை கொடுத்து, அவன் நன்கு சுகமடையும் வரை கவனிக்க சொன்னான்.
20













நல்ல சமாரியன்

தேவனுடைய வார்த்தையாகிய
வேதாகமத்திலிருந்து ஒரு கதை

காணப்படுமிடம்

லூக்கா 10

“தேவனுடைய வார்த்தை உட்பிரவேசிக்கும் போது
வெளிச்சம் கொடுக்கிறது.” சங்கீதம் 119:130

நாம் தவறுதல்களை செய்திருக்கிறோம் என்று தேவனுக்குத் தெரியும். அதை அவர் பாவம் என்று அழைக்கிறார். பாவத்திற்கு தண்டனை மரணமாகும்.

தேவன் நம்மை அதிகமாக நேசிப்பதினாலே, தன்னுடைய சொந்த குமாரனாகிய இயேசுவை இந்த உலகத்திற்கு அனுப்பி, நம்முடைய தண்டனையை அவர் ஏற்றுக் கொண்டு, நமக்காக சிலுவையில் மரணமடையச் செய்தார். இயேசு உயிரோடு வந்து, திரும்பவும் பரலோகத்திற்கு சென்றார். இப்போது தேவனாலே நம்முடைய பாவங்களை மன்னிக்க முடியும்.

உங்களுடைய பாவங்களிலிருந்து மனந்திரும்ப விரும்பினால், இந்த வாக்கியங்களை தேவனிடம் சொல்லுங்கள்: பிரியமுள்ள தேவனே இயேசுவே என்னுடைய வாழ்க்கைக்குள் வாரும், என்னுடைய பாவங்களை மன்னியும், அதன் மூலம் நான் புதிய வாழ்வை இன்று பெற்று, உம்மோடு எப்போதும் இருக்க உதவி செய்யும். நான் உம்முடைய பிள்ளையாக வாழ உதவி செய்யும். ஆமென்.
யோவான் 3:16

வேதாகமத்தை தினந்தோறும் வாசித்து, தேவனுடன் பேசவும்.